## பாடநெறியின் அமைப்பு

முதலாம் ஆண்டு நிறைவின் போது பட்டயம் (Diploma)
இரண்டாம் ஆண்டு நிறைவின் போது மேற்பட்டயம் (Higher Diploma)
மூன்றாம் ஆண்டு நிறைவின் போது பட்டம் (Degree)

## பட்டம் வழங்குதல்

ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் பாடநெறியை முழுமைப்படுத்தும் போது முறையே பட்டயம் (Diploma) மேற்பட்டயம் (Higher Diploma), பட்டம் (Degree) ஆகிய சான்றிதழ்கள் வழங்கப்படும். சான்றிதழ்கள் யாவும் பிரான்சு தமிழ்ச் சோலை நிறுவனத்தால் நடத்தப்படும் பட்டமளிப்பு விழாவின் போது வழங்கப்படும்.

## பட்டத்தினை வழங்குபவர்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் ஊடாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பட்டத்தினை வழங்குகிறது. இந்தப் பட்டமானது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

## மாணவரைப் பதிவு செய்தல்

பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள்
1. முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம்
2. பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட படி.
3. கல்விச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட படி.
4. அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட படி.
5. கடவொப்பம் அளவிலான விண்ணப்ப ஒளிப்படப் படிகள் மூன்று.

**பதிவுகள் இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படலாம்.**

1 . நேரடியாகப் பதிவு செய்தல் தமிழ்ச்சோலை தலைமைப் பணியகத்திற்குச் சென்று உரிய ஆவணங்களையும் கட்டணங் களையும் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம்.

2 . அஞ்சல் மூலமாகப் பதிவு செய்தல் மற்றும் மின்னஞ்சல் (அஞ்சல் மூலம் மேற்கொள்ளப்படும் தொடர்புகளின் போது ஏற்படும் காணாமற் போதல்கள் மற்றும் காலநீட்டங்களுக்கு நிறுவனம் எவ்வகையிலும் பொறுப்பேற்கமாட்டாது.



## பொதுவான ஐயப்பாடுகள்

1. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறியைத் தொடர்வதற்குக் கணினி மற்றும் இணைய அறிவு தேவையா ?

மிகக் குறைவான கணினி மற்றும் இணைய அறிவு போதுமானது. computermouse ஐ கையாளத் தெரிந்தாலே போதும். அதனைக் கற்கை நெறிகளைப் பயிலும் போதே மிக இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

2. தமிழ் இணைக் கல்விக்கழகம் / தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகம் வழங்கும் சான்றிதழ்கள் உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப் பட்டவையா? (University Grant Commission)

ஆம். இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

3. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறியைத் தொடர்வதற்கு இந்தியாவிற்குச் செல்ல வேண்டுமா?

ஒருபோதும் தேவையில்லை. பிரான்சு நாட்டில் இருந்தவாறே பாடநெறி முழுவதையும் மழுமைப்படுத்த முடியும்.